பண்முகப் பொழுது போக்குகளும் பணத்திசையை நோக்கியே பலர் சென்று கொண்டிருக்கும் இக்காலச் சூழலில் மக்கள் பணியாற்ற மன்றங்கள் அமைத்து மகத்தான சேவை செய்ய சிலர் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் நிலை பல இடங்களில் உண்டு!

"சமுதாயத் தலைவர் அவர்களின் ஊழியர் ஆவார். மற்றவர்களுக்கு ஊழியம் புரிவதில் முந்திக் கொள்பவரை மக்கள் வேறெந்த செயலாலும் முந்திக் கொண்டு முன்னேற முடியாது. இறைவழியால் வீர மரணம் அடைபவரைத் தவிர" என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய நற்செய்தியின்படி மக்கள் ஊழியராக சேவையாற்றுபவரே, அவர்களின் தலைவராக விளங்கிட முடியும் என கூறியதுடன் நன்மையில் முந்திக் கொள்ளும் மகத்தான பாக்கியத்தையும் நாம் விளங்கிடச் செய்தார்கள்.

இத்தகைய நற்சேவையாளர்களை மக்கள் எப்பொழுதும் வாழ்த்திப் பேசி அவர்களுக்காக வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிவதையும் பார்க்கலாம். 'எவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களை யாவரும் நேசிக்கும்படி ரஹ்மான் நிச்சயமாக செய்வான்' (திருக்குர்ஆன் 19:96) என அல்லாஹ் அருளிய வாக்கின்படி நற்பணியாற்றும் நன்மக்கள் நேசர்களாக ஆகிவிடுகின்றனர். இச் சிறப்புமிகு மக்கள் நேசர்களான களப்பணியாளர்களுக்கு மக்கள் தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதுடன் தங்களுக்கும் அவர்கள் செய்யும் அரும் பணிகளின் நன்மைகளின் பலன் அல்லாஹ்வால் வழங்கப்பட வேண்டும் என்கிற தூய உணர்வுடன் அப்பணியாளர்களின் சேவைகளுக்கு துணை நிற்க முன்வர வேண்டும்.

# சமுதாய சங்கங்கள் ஓர் அறிமுகம்

- அபு கியாதிய்யா -

இத்தகைய உன்னத மிக்க சமுதாய ஊழியர்களால்தான் சங்கங்கள் செழிப்படையவும் அதன் சேவைகளான மார்க்கப்பணி, மக்கள் நல்வாழ்வுப் பணி, கல்விப் பணி, நிவாரணப் பணி, ஏழை எளிய மாணவச் செல்வங்களுக்கான உயர் கல்விக்கு உதவும் பணி, அனாதை விதவைகளுக்கு உதவி செய்யும் பணி, வேலையில்லாதோருக்கு உரிய வேலை தேடிக் கொடுத்து உதவும் பணி, பிரச்சினைக்கு உட்பட்டோரின் சஞ்சலம் தீர்க்கும் பணி, சண்டையிட்டுக் கொள்வோரிடையே சமாதானம் நிலவச் செய்யும் பணி போன்ற நற்சேவைகள் காலமெல்லாம் பயன்பெறும் முறையில் சிறப்பாக அமையும்.

## மக்கள் நேயர்கள்

## நிர்வாகிகள் தேர்வு

சுங்க நிர்வாகிகளைத் தேர்வு செய்யும் பொழுது அதன் அடிப்படை நோக்கங்களில் பிடிப்புள்ளவர்களையும், அதன் பணிகளை நிறைவேற்ற தியாகம் செய்யும் துடிப்பும் தூரநோக்கும் மக்களிடம் பரஸ்பர நல்லெண்ணத்துடன் பேர் புகழை நாடாவண்ணம் பழகி அரவணைத்துச் செல்லும் ஆற்றலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கமிகு பேணுதலுடைய இறையச்சம் கொண்டவராகவும் பார்த்தும் தெரிவு செய்ய வேண்டும்.

உங்களில் எவர் மிகவும் பயபக்தி உடையவராக இருக்கிராரோ அவர் தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக கண்ணியமானவர் (திருக்குர் ஆன்

43:13) என இறைவன் தெளிவுபடுத்தியுள்ளான். இப்படி இல்லாமல் கூட்டத்திற்கு வந்தவர்களைப் பார்த்தும் சிலரின்

கவர்ச்சியான, உறுதியான பேச்சு, தோற்றம், செல்வச் செழிப்பு, செயலற்ற கல்வி அந்தஸ்து, கோஷ்டிகளின் பின்னணி பார்த்து தேர்வு செய்தால் அச்சங்கங்களின் அடிப்படை தூய நோக்கங்களுக்கு களங்கமும்; அறப்பணிகளின் பின்னடைவும், மக்களின் வெறுப்பையும் தான் பெறமுடியும். இவ்வாறாக தேர்வு செய்யப்படும் நிர்வாகிகள் தங்களின் சுய பிரபலத்திற்காகவும் அதை ஒரு கவுரமாகவும் கருதி பதவி நீடிக்க முயல்வர். அது பதவி மோகத்தை உண்டு பண்ணி விடும். இது குறித்து அருமை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தண்ணீர் கீரையை உற்பத்தி செய்வது போல பதவியாசை நயவஞ்சகத்தன்மையை உற்பத்தி செய்து விடும்' என எச்சரித்துள்ளார்கள்.

இத்தகைய பதவி மோகம் கொண்டவர்களுக்கு பின்னர் பதவி கிடைக்காவிட்டால் பிறரின் சேவைகளை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் தவிப்பதும், அவர்களைக் குறை கூறித் திரிவதும், தேவையான ஒத்துழைப்பை வழங்க முன்வராத தன்மையும் முரண்பட்டக் கருத்துக்களை வெளிப்படுத்தி தங்களை அடையாளம் காட்டிக் கொள்வது, தங்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்திய அமைப்புக்கு எதிராக நன்றி கெட்ட குணத்தையும் காட்டுவதுடன் பதவிக்காக, பிரபலத்திற்காக புதுப்புது அமைப்புகளை நாடி கிடைக்கும் பதவிகளில் இவர்கள் ஒட்டிக் கொள்வர்.

கண்ணியமிகு நிர்வாகத் திறன் கொண்ட சேவையாளர்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப் பட்டால் பின்னர் இவர்கள் பதவி இல்லா காலங் களிலும் பன்மடங்கு சேவை செய்யக் கூடியவர் களாகவும், புதிய நிர்வாகிகளுக்கு உற்சாகத்தை ஊட்டி ஒத்துழைப்பு நல்கக் கூடியவர்களாகவும், தக்க ஆலோசனைகளை தாமே முன்வந்து வழங்கக் கூடியவர்களாயும் திகழ்வர். நிச்சயமாக எவர்கள் பயபக்தி உடையவர்களாக இருக்கின்றாரோ அவர்களுடனும், எவர்கள் நன்மை செய்கின்றரோ அவர்களுடனும் அல்லாஹ் இருக்கிறான்(16:128) என்ற இறைவசனத்தை உணர வேண்டும்.

## ஆதரவு நகுவீர்

ஏழை மாணவச் செல்வங்கள் உயர்கல்வி பெற அத்தனை முழுச் செலவையும் ஏற்றல், எளியோர், விதவை, பாதிக்கப்பட்டோரின் ஏற்றமிகு வாழ்வு அமைய உதவுதல், நிவாரணப் பணிகள், பொதுப் பணிகளில் தொய்வின்றி நடைபெற பொருளால் பொன்னான கருத்துக்களால் பெருமைத்தனமில்லா பேராதரவால் சமுதாய மக்கள் தங்களின் பங்களிப்பை செய்திட வேண்டும்.

சமுதாயச் சங்கங்கள் கல்விக் கூடங்களை உருவாக்கிட வேண்டும். ஆரம்பப்பள்ளி முதல் உயர் கல்லூரி வரை அதிக அளவில் தொடங்கப்பட வேண்டியது இக்கால கட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படக் கூடிய அம்சமாகும். உலக வரலாற்றில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆசியாவிலும், ஆப்ரிக்காவிலும், ஐரோப்பாவிலும், உயர் கலாசாலைகளை அமைத்து அனைத்து மதத்தினரும் பயன்படும் வகையில் தீர்மானித்து சாதனை படைத்தவர்கள் முஸ்லிம்கள். அச்சீர்மிகு பாரம்பரியப் பணிகளை சமுதாயச் சங்கங்கள் செயல்படுத்திட வேண்டும்.

கடல் கடந்த நாடுகளில் நம் சமுதாயச் சங்கங்கள் பல மக்கள் நலப்பணிகளும் ஏழை மாணவச்செல்வங்களின் மேற்கல்விக்கு உதவித் தொகைகளை வழங்கி பல அரும்பணிகளை நிறைவேற்றி வருகிறது. அவ்வரிசையில் துபை - ஈமான் சங்கம், அபுதபி அய்மான் சங்கம், ஷார்ஜா சீமான் சங்கமும் நற்சேவைகளில் தனி இடம் பெற்று

வருகிறது. அய்மான் சங்கம் திருச்சி மாநகரில் அய்மான் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியை நிறுவியது.

தமிழகத்தில் நம் சமுதாயத் தினரால் பல சொஸைட்டி, டிரஸ்ட் அமைப்புகள் முலம் ஆரம்ப பாட சாலைகள் முதல் பல துறை கல்லூரிகளையும், மருத்துவமனைகளையும், அனாதை நிலையங் களையும், திருக்குர்ஆன் விரிவுரை,ஹதீஸ், கிரந்தங்களின் மொழியாக்கம், பல அருமையான நூல்களை தேர்வு செய்து வெளியிடல் போன்ற பணிகளையும் சன்மார்க்க கலைக்கூடங்களையும் நிறுவி திறம்பட நிர்வகித்து மக்கள் பலனடைய செய்கின்றனர்.

இவ்வாறான அரும் பணிகளை சங்கங்கள் யாவும் செய்திட முயல வேண்டும். இச்சிறப்புமிகு காரியமாற்றும் அமைப்புகளை மக்கள் வாழ்த்தி துஆச் செய்ய வேண்டும். அவர்களுக்கு நல் ஆலோசனைகளையும் வழங்கி ஆர்வத்தை அதிகப்படுத்திட வேண்டும்.

## ஆலோசனை வழங்கல்

"ஆலோசனை தேடப்படுபவர் அமானித முடையவராவார்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை பகன்றதன் முலம் எப்படி அமானிதப் பொருள் வைத்திருப்பவர் நம்பிக்கை துரோகமின்றி அதை உரியவரிடம் நிச்சயமாக கொடுத்து விட வேண்டுமோ. அதுபோல ஆலோசனை கேட்கப்படுபவர் தக்க ஆலோச னைகளை இறைநீதிக்குப் புறம்பில்லாது சுய நலமின்றி துவேஷ உணர்வில்லாது வழங்குவது கட்டாயக் கடமையாகும். குழுக் கூட்டத்திற்கோ, தனி ஆலோசனைகளுக்காகவோ அழைக்கப்படுகின்ற போது தெளிவாக சிந்தித்து பயன்தரத்தக்க ஆலோசனையை தெரிவிக்க வேண்டும். சரியான ஆலோசனை ஏதும் புலப்படவில்லை என்றால் அமைதியாக இருந்துவிட வேண்டியதுதான் சரியான அணுகுமுறை.

இவர்களுக்கு நினைவூட்ட வல்ல ரஹ்மான் தனது அருள்மறையில் ' எவரேனும் யாதொரு நன்மையான காரியத்திற்கு சிபாரிசு செய்தால் அதில் ஒரு பாகம் அவருக்குண்டு. (அவ்வாறே) யாதொரு தீய விஷயங்களுக்கு சிபாரிசு செய்தால், அதிலிருந்து அவருக்கொரு பாகமுண்டு. அல்லாஹ் யாவற்றையும் முறைப்படி கவனிப்போனாயிருக்கின்றான்(4:85).

கிடைக்கும் காலங்களை கடமை உணர்வுடன் அர்ப்பணிப்பு தன்மையுடன் சேவையாற்ற முன் வந்த நிர்வாகிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை முறைப்படி நிறைவேற்றுவதுடன் சக நிர்வாகிகளின் பணிகளுக்கும் உதவிட வேண்டும். தக்க நேரங்களில் உரிய நினைவூட்டல்களை ஆலோசனைகளை தலைவருக்கு வழங்கியும், தலைமைக்கு கட்டுப்பட்டு, நிர்வாகிகள் உறுப்பினர்களுடன் பொது மக்களுடன் ஐக்கியமாகவும், ஒற்றுமையை வலியுறுத்தி செயலாற்றிட முன்வர வேண்டும். அனுபவமிகு தலைவர்கள் சக நிர்வாகிகளுக்கு உரிய பயிற்சியை கொடுத்து பிற்காலத்தில் சிறந்த சமுக சேவகர்களாக அவர்கள் உருவாகிட துணை நிற்க வேண்டும். மாறுபட்ட கருத்துகளால் மக்களைப் பிரித்திடாமல் எல்லா நிலைகளிலும் ஒன்றுபட்டு இயங்கவும், ஓரணியில் சேவையாற்றவும், குரல் கொடுக்கவும் நற்பணிகளில் நல்லிணக்கத்துடன் நன்மையை நாடியும் நல்லோர்களுடன் இணைந்து வாழ சங்கங்கள் சமுதாய மக்களுக்கு ஒரு கருவியாக அமைய வேண்டும். அல்லாஹ் நம் சேவைகளை அவனது திருப்பொருத்தத்திற்கு உரியதாக ஆக்கி அருள்பாலிப்பானாக!

ஆமீன்!